# 10 இறையாட்சி



10.1 -




இயேசு இறையாட்சியைப் போதித்தார். இறையாட்சியைப் பற்றிய செய்தியே அவருடைய போதனையினதும் செயலினதும் மையமாக உள்ளது. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். இறையாட்சியை வெற்றி கொள்ள நாம் அர்ப்பணத்துடன் செயலாற்ற வேண்டும். இயேசு இறையாட்சி விழுமியங்களை உவமைகள் மூலம் கற்பித்தார்.

✝ விதைப்பவன் உவமை (லூக்கா 8 : 5 - 8)

✝ புதையல், முத்து, வலை தொடர்பான உவமைகள் (மத்தேயு 13 : 44 - 50)

### விதைப்பவர் உவமை



10.2

இவ்வுவமை இறையாட்சியின் வளர்ச்சி, அவ் வளர்ச்சிக்குள்ள தடைகள் இறைவார்த்தையின்படி உருவாக வேண்டிய மன நிலை என்பன பற்றியெல்லாம் விளக்குகிறது. தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு நாம் இடம் கொடுக்குமளவுக்கே புதிய வாழ்வின் விதைகள் எம்மில் செழிப்பாக வளர்ச்சி அடையும். எனவே நாம் இறைவார்த்தைக்கு கவனமுடன் செவிமடுக்க வேண்டும்.

| விதைகள் விழுந்த நிலம் | விதைகளுக்கு நடந்தவை | உவமையின் விளக்கம் |
|---|---|---|
| வழியோரம் விழுந்த விதைகள் | வானத்துப் பறவைகள் அவற்றை விழுங்கி விட்டன. | விதை என்ற இறை வார்த்தையை அலகை உள்ளத் திலிருந்து எடுத்து விடுகிறது. |
| பாறைமீது விழுந்த விதைகள் | மண் ஆழமாக இல்லா ததால் அவை விரைவில் முளைத்தன. கதிரவன் மேலே எழ அவை காய்ந்து போயின. | இறைவார்த்தையை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு சில காலம் அதன்படி நடப்பவர்கள் சோதனை வேளையில் இறைவார்த்தையை மறந்து விடுவார்கள். |

| | | |
|---|---|---|
| முட்செடிகளின் நடுவே விழுந்த விதைகள். | கூடவே வளர்ந்த முட் செடிகள் அவற்றை நெருக்கி விட்டன. | இறைவார்த்தையை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு சிலகாலம் அதன்படி நடப்பார்கள் ஆனால் சோதனை வேளையில் இறைவார்த்தையை மறந்து விடுவார்கள். |
| நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் | நூறு மடங்காக விளைச் சலைக் கொடுத்தன. | இறைவார்த்தையைக் கேட்டு நேர்மையாக தூய்மையாக வாழ்வார்கள். |

**புதையல் உவமை**



10.3

ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டு பிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்து விட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக் கொள்கிறார்.

(மத்தேயு 13 : 44)

இவ்வுவமையின் மூலம் நாம் பெறும் செய்தி இறையரசை உரிமையாக்கிக் கொள்ள எமக்குச் சொந்தமான அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதாகும். மறைந்திருக்கும் புதையல் சிறிதாயினும் அதன் பெறுமதி விலை மதிக்க முடியாதது. இறையாட்சி பெரிய லௌகீக அரசாக இல்லாதிருப்பினும் அதன் பெறுமதியை அளவிட முடியாது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## முத்து உவமை



10.4

வணிகர் ஒருவர் நல்முத்துக்களைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர்போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்கிறார்.

(மத்தேயு 13 : 45 - 46)

விண்ணரசின் பெறுமதியை இவ்வுவமை எடுத்துக் கூறுகிறது. வணிகன் தனது உடைமைகள் எல்லாவற்றையும் விற்று விலையுயர்ந்த முத்தை விலை கொடுத்து வாங்குகிறான். இறையரசைத் தேடிப் பெற்றுக் கொள்ள தமக்குரியதைத் தியாகம் செய்ய வேண்டியவர்களாகின்றோம்.

## வலை உவமை



10.5

விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையே இருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.

(மத்தேயு 13 : 47 - 50)

மீன்கள் நிறைந்த வலையை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்து நல்ல மீன்களைக் கூடைகளில் நிரப்பிக் கெட்டவற்றை எறிந்து விடுவர். இதேபோல் இறுதித் தீர்ப்பின்போது நேர்மையாளரையும் தீயோரையும் பிரித்தெடுத்து அவர்களுக்குரிய தீர்ப்பை இயேசு வழங்குவார் என்பதை இவ்வுவமை கற்பிக்கின்றது.

**செயற்பாடு**

1. இறையாட்சி பற்றிக் கூறப்படும் உவமைகள் 5 தருக.
2. அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக எழுதி அதன் படிப்பினைகளைச் சுருக்கமாக எழுதுக.

**வாழ்க்கைக்கு**

இறையாட்சியின் பண்புகளை எம்மில் வளர்த்துக் கொள்வோம்.